©
தமிழ்நாடு அரசு
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 21] சென்னை, புதன்கிழமை, ஜூன் 2, 2010
வைகாசி 19, திருவள்ளுவர் ஆண்டு – 2041

# பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

---

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

#### அறிவிக்கை

*[அரசாணை (2டி) எண் 61, தொழிலாளர் நலன் – வேலைவாய்ப்பு (J1)த் **துறை**, நாள்: 6 ஜூலை 2009.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டம் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் தொழிலாளர் நலன் – வேலைவாய்ப்புத் துறையில் உருவாகி 09–07–2003ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழ்*** பாகம் II—பிரிவு 2, 276 மற்றும் 277ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II (2) தொழிலாளர் நலன் – வேலைவாய்ப்பு/485/2003ஆம் எண்ணுள்ள அறிவிக்கையை இரத்து செய்து, அதற்குப் பதிலாகவும் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனை குழுவிடம் கலந்தாலோசித்தப் பின்னர், புகையிலை தயாரிப்பு, மூக்குப்பொடி தயாரிப்பு தொழிலில் ஈடுபட்டுள்ள கீழே விவர அட்டவணை நெடும்பத்தி (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள வகையைச் சேர்ந்த பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அதன் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு, இதனால் திருத்தி அமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**புகையிலைத் தயாரிப்புத் (மூக்குப்பொடி தயாரிப்பு) தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* (1) | *பணியாளர்களின் வகை.* (2) | *குறைந்தளவு ஊதியங்கள்.* (3) *ரூ. காசு* |
|---|---|---|
| 1. | **தேர்ச்சி பெற்றோர்**<br>மூக்குப்பொடி தயாரிப்பில் அனைத்து செயல்முறைகளிலும் ஈடுபடும் தொழிலாளர்கள் (உடலுழைப்பு) | 96.50<br>(நாள் ஒன்றுக்கு) |
| 2. | **ஓரளவு தேர்ச்சி பெற்றோர்**<br>தண்டுப்பகுதி நீக்குதல் (Stripping) வறுத்தல் அல்லது பொறித்தல் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் (உடலுழைப்பு) | 82.00<br>(நாள் ஒன்றுக்கு) |

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகை* | *குறைந்தளவு ஊதியங்கள்.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* *ரூ. காசு* |
| 3. | **தேர்ச்சி பெறாதோர் :** | |
| | **தண்டுப்பகுதி நீக்குதல் :** கையாளுதல், சிப்பம் கட்டுதல், ஏனைய பல்வகைப்பணிகள் (உடலுழைப்பு) | 78.00 (நாள் ஒன்றுக்கு) |
| 4. | **செய்யும் வேலைக்கேற்ப ஊதியம் பெறும் தொழிலாளர்கள்** | |
| | (i) ஒரு கிலோகிராம் புகையிலையை மூக்குப்பொடியாக மாற்றுவதற்கு | 8.81 |
| | (ii) ஒரு கிலோகிராம் புகையிலையை துண்டுகளாக்குவதற்கு | 0.99 |
| | (iii) ஒரு கிலோகிராம் புகையிலையை தண்டுப் பகுதி நீக்குவதற்கு | 1.05 |
| | (iv) ஒரு கிலோகிராம் புகையிலையை வறுப்பதற்காக மற்றும் பொறிப்பதற்காக | 2.75 |
| | (v) ஒரு கிலோகிராம் புகையிலையை அரைப்பதற்காக | 2.75 |
| | (vi) ஒரு கிலோகிராம் புகையிலையை கலப்பதற்காக | 1.43 |

**விளக்கங்கள்: (1)** அகவிலைப்படி மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களோடு, தொழிலாளர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்படவேண்டும்.

(i) 2000–ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணுடன் அகவிலைப்படி இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 1982 ஆம் ஆண்டில் 1 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி, திங்களொன்றுக்கு 16 காசு (பதினாறு காசு மட்டும்) கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) நுகர்வோர் விலைப் புள்ளிகளில் சராசரியை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) இவ்வாறாக, முந்தைய ஆண்டிற்கான நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு முதல் கணக்கீடு இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

2. பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண், பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது.

3. (i) ஒரு நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, மாதாந்திர ஊதியத்தை 26 – ஆல் வகுக்க வேண்டும்.

(ii) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு ஒரு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

4. மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களிலும் அகவிலைப்படியிலும், விடுமுறை ஊதியங்களும் அடங்கும்.

5. தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும், அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

## அறிவிக்கை

*[அரசாணை நிலை எண் 36, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு* (I1)*த் துறை நாள்: 1 மார்ச் 2010.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 6 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) மற்றும் (5) உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு கட்டுமானப்பணியாளர்கள் நல வாரியத்தை சீரமைத்து, பின்வரும் உறுப்பினர்களை இதனால் நியமனம் செய்கிறார், அதாவது:

**அ. அரசுப் பிரதிநிதிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. பொன்குமார் | .. | தலைவர் |
| 2. | தொழிலாளர் நல ஆணையாளர், சென்னை–6 | .. | உறுப்பினர் |
| 3. | அரசு செயலாளர்,<br>நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9. | .. | உறுப்பினர் |
| 4. | அரசு செயலாளர், நிதித் துறை, சென்னை–9. | .. | உறுப்பினர் |
| 5. | நகராட்சி நிருவாக ஆணையாளர், சென்னை–5. | .. | உறுப்பினர் |
| 6. | பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை–108. | .. | உறுப்பினர் |
| 7. | சென்னை மாநகராட்சி ஆணையாளர், சென்னை–3 | .. | உறுப்பினர் |

**ஆ. உடலுழைப்புத் தொழிலாளர்களின் பிரதிநிதிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. அம்பத்தூர் ப்பி. செல்வராஜ்,<br>தொழிலாளர் முன்னேற்ற கூட்டமைப்பு, 13/2, ஹெச் ஐ ஜி, நிலை II,<br>தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், திருமுல்லைவாயில், சென்னை–600 062. | .. | உறுப்பினர் |
| 2. | திரு. ஜே. பழனி, தொழிலாளர் முன்னேற்ற கூட்டமைப்பு, கச்சேரி மேடு,<br>அரசு மருத்துவமனை அருகில், அரூர் அஞ்சல் & வட்டம், தருமபுரி மாவட்டம். | .. | உறுப்பினர் |
| 3. | திரு. ஏ. தருமன், தொழிலாளர் முன்னேற்றக் கூட்டமைப்பு,<br>60/சி, கம்பஇராமாயணம் தெரு, வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி–627 003. | .. | உறுப்பினர் |
| 4. | திரு. ஜி. செல்வம், தமிழ்நாடு கட்டடப் பணியாளர்கள் மத்தியக் கழகம்,<br>சிவன் கோயில் தெரு, தேவஸ்தானம் அஞ்சல், வாணியம்பாடி வட்டம்,<br>வேலூர் மாவட்டம். | .. | உறுப்பினர் |
| 5. | திரு. எஸ்.வி. நாகராஜன், இந்திய தேசிய தொழிற்சங்கப் பேரவை,<br>7, வேலு இல்லம், 20–வது தெரு, 5–வது அவென்யு, அசோக்நகர், சென்னை–83. | .. | உறுப்பினர் |
| 6. | திரு. எம். பன்னீர்செல்வம், பொதுச்செயலாளர்,<br>இந்திய தேசிய தொழிற்சங்கப் பேரவை, அகில இந்திய கட்டடத்தொழிலாளர்கள்<br>மத்தியச் சங்கம், 179/80, ஆதாம் சாஹிபு தெரு, இராயபுரம், சென்னை–600 013. | .. | உறுப்பினர் |
| 7. | திரு. ஆர். சிங்காரவேலு, மாநில உதவி பொதுச் செயலாளர், இந்திய வர்த்தக மையம்,<br>(centre of Indian trade unions) 291-A, அம்மாசி நகர், புறவழிச் சாலை,<br>சூரமங்கலம், சேலம்–636 005. | .. | உறுப்பினர் |
| 8. | திரு. கே. ரவி, மாநிலச் செயலாளர், தமிழ்நாடு அகில இந்திய தொழிற்சங்கப் பேரவை<br>(AITUC), பழைய எண் 4B, புதிய எண் 7, 13–வது குறுக்குத் தெரு, புதிய காலனி,<br>குரோம்பேட்டை, சென்னை–600 044. | .. | உறுப்பினர் |
| 9. | திருமதி. ப்பி. மகாலட்சுமி, தமிழ்நாடு கட்டடத் தொழிலாளர்கள் மத்தியக் கழகம்,<br>9, 38–வது டாக்டர் அம்பேத்கார் தெரு, ஜி.கே.எம். காலனி, சென்னை–82. | .. | உறுப்பினர் |

**இ. வேலையளிப்பவரின் பிரதிநிதிகள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைவர்/பொறியாளர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், 331, அண்ணா சாலை,<br>நந்தனம், சென்னை–35. | .. | உறுப்பினர் |
| 2. | தலைவர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், காமராஜர் சாலை, சென்னை–5. | .. | உறுப்பினர் |

| | | | |
|---|---|---|---|
| 3. | அரசு செயலாளர், நெடுஞ்சாலைத் துறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை—9. | .. | உறுப்பினர் |
| 4. | அரசு செயலாளர், பொதுப்பணித் துறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை—9. | .. | உறுப்பினர் |
| 5. | அரசு செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை—9. | .. | உறுப்பினர் |
| 6. | திரு. எம். மோகன், தலைவர், இந்தியக் கட்டுமான நிறுவனங்கள் கூட்டமைப்பு, 1798, "I" பிளாக், 2—வது தெரு, அண்ணநகர் மேற்கு, சென்னை—600 040. | .. | உறுப்பினர் |
| 7. | திரு. என். ரகுநாதன், செயலாளர், இந்தியக் கட்டடம் கட்டுவோர் சங்கம், 62, (புதிய எண் 46) "D" பிளாக், அண்ணாநகர் கிழக்கு, சென்னை—600 102. | .. | உறுப்பினர் |
| 8. | திரு. எல். மூர்த்தி, மாநிலத் தலைவர், இந்தியக் கட்டடம் கட்டுவோர் சங்கம், மனை எண் 4, லேக் வியூ தெரு, அருணாச்சலம் நகர், கீழ்கட்டளை, சென்னை—117. | .. | உறுப்பினர் |
| 9. | திரு. ஏ. ஷாஜகான் சையத், எண் 23, சேமியர்ஸ் சாலை, நந்தனம், சென்னை—600 035. | .. | உறுப்பினர் |

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

*[அரசாணை நிலை எண் 13, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (12)த் துறை, 12 பிப்ரவரி 2010.]*

1986ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 68/1988) 17—B ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மாநில ஆணையத்துடன், ஆலோசனை செய்த பின்னர், மாநில ஆணையம் அதன் செயல்பாட்டினை மதுரையிலும் செயல்படுத்தும் என்று இதனால் அறிக்கையிடுகிறார்.

**கே. சண்முகம்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.